DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.காளிமுத்து | Father/Husband Name : பன்னீர்செல்வம் |
| Age : 41 | Village : தென்காசி |
| Taluk : | Calling : காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Oct 23, 2025 12:47 PM

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் தற்போது தென்காசி மாவட்டத்தில் மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 04.01.2020ம் தேதி வெம்பக்கோட்டை காவல்நிலையத்தில் நிலையபொறுப்பில் இருந்தபோது 19.00 மணிக்கு சாமுவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைகேற்ப காவல்நிலைய குற்ற எண் 3/2020 பிரிவுகள் 279, 304A இ.த.ச ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம் சாத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். (**<u>முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**).

3. பின்னர் வழக்கு கோப்பினை ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

4. புகாரை யார் எழுதினார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் எங்கு வைத்து நடைபெற்றது என்பவதை முதல் தகவல் அறிக்கையின் காலம் -5ல் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. மடத்துப்பட்டி- தாயில்பட்டி சாலையில் உள்ள தங்கவேல் தேவர் வீட்டிற்கு எதிர்புறம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஊர் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த விபரத்தை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்ததற்கான விபரத்தை முதல் தகவல் அறிக்கையின் 3(c)வது காலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை பின்னிட்டு தயார் செய்யப்பட்டதால் தான் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்த விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. புகார் காலதாமதம் இல்லாமல் உரிய நேரத்தில் கொடுக்கப்பட்டதா என்பது தொடர்பாக விவரங்கள் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை தகவல் கொடுத்த நபருக்கு படித்து காண்பித்து அது சரியாக எழுதப்பட்டிருப்பதாக அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்றால் படித்து காண்பிக்கப்பட்டது, அவரால் அது சரியாக இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு ஆதாரமாக

அவரிடம் முதல் தகவல் அறிக்கையில் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

6. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் மனு பெறப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. புகார் மனுவும், முதல் தகவல் அறிக்கையும் வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Oct 23, 2025 1:01 PM

Judicial Magistrate 2, Sattur